# இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

# வருடாந்த அறிக்கை - 2016

# பொருளடக்கம்

| தலைப்பு | பக்க இலக்கம் |
|---|---|
| தொலைநோக்கு, செயற்பணி | 3 |
| பணிப்பாளர் சபை | 4 |
| தலைவரது மீளாய்வு | 6 |
| சபை பற்றிய தகவல்கள் | 7 |
| ஒட்டுமொத்த செயலாற்றுகை2016 | 8 |
| வருடாந்த கணக்குஅறிக்கை | 16 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 39 |

# வருடாந்த அறிக்கை - 2016

## தொலைநோக்கு

விவசாய சமூகத்தினரினதும் குறைந்த வசதிகளுடைய மக்களினதும் கௌரவத்தை மீள உருவாக்கும் நோக்கில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதன்மூலம் பொருளாதார சுயாதீனத்தையும் சுய நம்பிக்கையையும் உருவாக்குதல்.

## செயற்பணி

பயனாளிகளின் பொருளாதார சுயாதீனத்தை ஏற்படுத்தும் பொருட்டும், பிறரில் சார்ந்திருக்கும் கலாசாரத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டும் விவசாய, கால்நடை மற்றும் ஏனைய துறைகளின் திறன் அபிவிருத்தி பொருட்டும் பங்குகொள்ளும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.

## 2016ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை

| பெயர் | பதவி | சேவை நிலையம் |
|---|---|---|
| திரு.தம்மிக பீரிஸ் | தலைவர் | இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை |
| திரு.ரவி கிஷான் ஜயவர்தன | உப தலைவர் | இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை |
| திரு.கே.மஹேசன் | மேலதிக செயலாளர்(அபிவிருத்தி) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| திருமதி.டப்.எம்.தீப்தி பர்னாந்து | மேலதிக செயலாளர்(உள்நாட்டு அலுவல்கள்) | உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சு |
| திரு.பி.எஸ்.எஸ்.விஜேரத்ண | சிரேஷ்ட உதவி செயலாளர் | கமத்தொழில் அமைச்சு |
| திரு.எச.ஜீ.ஜீ.ஜே.தர்மசேன | பணிப்பாளர் நாயகம் | மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் |
| திரு.டப்.ஏ.டி.டி.எம்.பிரியந்த | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு |
| திரு.விஜயசிறி விக்ரமசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல. 409/3சீ, மகய்யாவத்த, கலபுவாவ, முல்லேரியா நகரம் |
| திரு.பி.டப்.தர்மசிறி வெலிகல | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல.95,பண்டாரநாயக்க மாவத்தை, மிஹிதுபுர. அனுராதபுரம். |
| திரு.ஏ.ரீ.எம்.ஏக்கநாயக்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல. 121, யசசிறிபுர. அனுராதபுரம். |
| திரு.கிஷான் நிலங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் | 898/ ஏ4, தியதெர, பகலவெல வீதி, பெல்வத்த |

**2016ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள்**

367ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2016.04.05

368ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2016.06.09

369ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2016.07.28

370ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2016.08.31

371ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2016.09.29

372ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2016.11.10

373ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம்- 2016.12.29

2016ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை கூடிய நாட்களின் எண்ணிக்கை = 07

## தலைவரது மீள்நோக்கு

தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையின் தலைவர் என்ற வகையில் 2016ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை பொருட்டு நுண்ணாய்வுமிக்க செயலாற்றுகையை சமர்ப்பிப்பதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதிமேதகு மைத்திரிபால சிறிசேன சனாதிபதி அவர்களின் நஞ்சற்ற உள்ளூர் விவசாய பொருளாதாரத்தின்மூலம் விவசாயத்துறையின் நிலைபேறான அபிவிருத்தி எனும் எண்ணக்கருவினை முதலாகக் கொண்டு நஞ்சற்ற சுகாதாரமிக்க தேசிய உணவுகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இதன் பொருட்டான கௌரவ கமத்தொழில் அமைச்சர் துமிந்த திசாநாயக்க அவர்களின் வழிகாட்டலும் ஆசிர்வாதமும் பெரிதும் மெச்சத்தக்கன.

எமது சபை 2016ஆம் ஆண்டில் பின்வரும் பிரதான செயற்றிட்டங்களை மேற்கொண்டது.

1. நஞ்சற்ற எமது உணவு – ஹெல்தி புட் விற்பனைக்கூட வலையமைப்பு
2. சோளம் விவசாயிகளை ஊக்குவிக்கும் செயற்றிட்டம்
3. தேசியஉணவுகளை பிரபல்யப்படுத்தும் “சிதமு-2016’’ உணவுவிழா
4. அரிசி பலப்படுத்தும் செயற்றிட்டம்.
5. வீட்டுத்தோட்டத்துக்கு கைகொடுத்தல்-மிளகாய் கன்று பகிர்ந்தளித்தல்
6. குறை பாவனை பழங்களை பயன்படுத்தி பழப்பானம் (Ready to serve drink) தயாரிப்பு
7. மவ்போஷ மற்றும் சுவபோஷ போசணை உணவு தயாரிப்பும் மேம்படுத்தல் செயற்றிட்டமும்
8. புத்தல மற்றும் தணமல்வில பண்ணை அபிவிருத்திசெயற்றிட்டம்
9. விவசாயி உற்பத்தி விற்பனைக்கூட செயற்றிட்டம்
10. உள்ளூர் பாரம்பரிய அரிசி உற்பத்தி மற்றும் நுகர்வினை பிரபல்யப்படுத்தும் செயற்றிட்டமும்

மேற்குறிப்பிட்ட பிரதான செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக, தற்கால தேவைகளுக்கு ஏற்றவகையில் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் உச்ச நியாயத்தை வழங்கும் முகமாக தெகிவளை மற்றும் நாரஹேன்பிட்டி விவசாயி உற்பத்தி விற்பனைக்கூடங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின்மூலம் நகர்வாழ் மக்களுக்கு பல நன்மைகள் வழங்கப்பட்டன.அத்துடன்,தெகிவளை மற்றும் நாரஹேன்பிட்டி நகர பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ளநாற்றுமேடைகள் மூலம் நகரவாசிகள் பொருட்டு குறைந்த இடவசதியுடன் உச்ச விளைவை பெறும்வகையில் விவசாய பயிர்செய்கையிடும் முறைகள் மற்றும் மரக்கறி, பூ வகைகள்,மூலிகைக் கன்றுகள்,பழக் கன்று வகைகள் போன்றனவற்றை சலுகை விலையில் வழங்குவதற்கும்,செய்கை பண்ணுவதற்கும் தேவையான அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

அத்துடன்,கலன்குட்டிய மற்றும் கன்னோறுவையில் அமைந்துள்ள உற்பத்திசாலைகள்மூலம் நஞ்சற்ற பாரம்பரிய உள்ளூர் அரிசி, தோசை மா, விசேட அரிசி மா, மவ்போஷ, சுவபோஷ, சிசுபோஷ போன்ற பல தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன் சந்தைக்கு வழங்கக்கூடியதாகவும் உள்ளது.

அத்துடன், பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களினால் புதிய போசணைமிகு உணவு வகைகள் கண்டுபிடிக்கப்படுகின்ற போதிலும் அவற்றை மேம்படுத்தும் முகமாக அரச நிறுவனம் எதுவும் முன்வராமை கவலைக்குரிய விடயமாகும். அதற்கிணங்க, குறித்த பணியை நிறைவேற்றும் ஆரம்ப படிநிலையாக மக்கள் நஞ்சற்ற உள்ளூர் உணவுகளை வாங்குவதற்கு ஏற்றவாறு ஹெல்தி புட் 100விற்பனைக்கூட வலையமைப்புஇலங்கை பூராகவும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்மூலம் நஞ்சற்ற பாரம்பரிய தேசிய உணவு வகைகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கும் அதன்மூலம் சிறு உற்பத்தியாளர்களுக்கு உச்ச வருமானமும் பெற்றுக்கொடுக்கப்படுவதுடன்மக்களின் போசணை மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டும் பங்களிப்பு வழங்கப்படும்.

அனுராதபுர மாவட்டத்தில் சோளம் உற்பத்திசெய்யும் செய்கையாளர்களின் விளைவுகளுக்கு அதிக விலையை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சோளச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் ஊடாக அந்த அறுவடைகளை நியாயமான விலைக்கு எமது நிறுவனத்தினால் வாங்கப்படுகின்றன.

அத்துடன், இந்தப் பணிகளை விரிவுபடுத்தி எதிர்காலத்தில் நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றை மக்களிடையே இலகுவாக கிடைக்கச் செய்வதும் அதன்மூலம் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் பயன் கிடைக்கச்செய்தல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தம்மிக பீரிஸ்
தலைவர்,
தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை.
(இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை)

## சபை பற்றிய தகவல்கள்

**சபையின் பெயர்:**
தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை (இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை)

**சட்ட உருவரைச்சட்டகம் மற்றும் அமைவிடம்**

1973ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க (இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டில் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை என பெயர் மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. பிரதான அலுவலகம் இல.45, கிரிமண்டல மாவத்தை, கொழும்பு 5 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

**பிரதான செயற்பாடுகளும் குறிக்கோள்களும்**
பிரதானமாக பொருளாதாரரீதியாக பாதிப்புற்ற மக்களுக்கு சேவையாற்றும் நிறுவனம். அதன் குறிக்கோள்களாவன:

- அரசாங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க சமூக, பொருளாதார அபிவிருத்தி பொருட்டு உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற முகவராண்மைகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- பொது வசதிகள், சமூக நலனோம்பல், பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை செயற்படுத்துகையில் நிறுவனங்களுக்கும் பிற சபைகளுக்கும் உதவுதல்.
- விவசாய,கைத்தொழில் அபிவிருத்திபால் ஈடுபடுத்தப்பட்ட குறித்துரைத்த செயற்றிட்டங்களுக்கு நன்கொடை வழங்குதலும் மேம்படுத்தலும், ஒருங்கிணைப்பு செய்தலும்.
- விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச சார்பற்ற முகவராண்மைகளை மதிப்பீடு செய்தல்.
- சருவதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதற்குச் சமமான வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது சமூகங்களுடன் ஒத்துழைத்தல்

**வரிசை அமைச்சு**
கமத்தொழில் அமைச்சு

**அலுவலகம்**
இல.45,கிரிமண்டல மாவத்தை,கொழும்பு 5.

தொலைபேசி : 0112506895/0113085378
தொலைநகல் : 0112506907
மின்னஞ்சல் : ffhc.srilanka@gmail.com

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி – பொரளை
மக்கள் வங்கி – தெகிவளை

**தந்திரோபாயங்கள்**

- அபிவிருத்தி முன்னெடுப்புக்களை ஒரு பொது குறிக்கோள்பால் ஒன்றிணைத்தல்.
- பொருளாதார வளர்ச்சி, சமூக, கலாசார அபிவிருத்திகளில் பங்குபற்றுவதற்காக கிராமிய மக்களுக்கு வாய்ப்பு வழங்குதல்.
- அபிவிருத்தி செயன்முறையில் முழுமையாக பங்குபற்றும் பொருட்டு கிராமிய மக்களை வலுவூட்டுதல்.
- சுயமாக முன்னோக்கிச் செல்லும் நீடித்த அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு சாதனை நோக்கிய விழுமியங்களுடனான சுய நம்பிக்கைக்கும் இயலுமைக்கும் பாரம்பரிய கிராமிய மக்களை மாற்றுதல்.
- உள்நாட்டு உணவு உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவித்தல்.
- அறுவடைக்கு பிந்திய சேதத்தை குறைக்கும் தொழினுட்பத்தை அடி மட்டத்திற்கு கொணடுசெல்லல

# ஒட்டுமொத்த செயலாற்றுகை- 2016

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையானது, 2016ஆம் ஆண்டில் 13 செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளதுடன், இந்தச் செயற்றிட்டங்களின் சுருக்கமான விபரங்கள் கீரே தரப்பட்டுள்ளன.

## 1. தாவரக்கன்று விற்பனைக்கூடம் – நாரஹேன்பிட்டி

நகர்வாழ்மக்களிடையே வீட்டுத்தோட்ட செய்கையை பிரபல்யப்படுத்தும் பொருட்டுதேவையான பொருள்களை சலுகை விலையில் கொள்வனவு செய்வதற்கு வசதியளிக்கும் முகமாக இந்த விற்பனைக்கூடம்நாரஹேன்பிட்டிபிரதான அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. எல்லா வகையிலான பூக் கன்றுகள்,அரிதாகக் கிடைக்கக்கூடிய பழக்கன்றுகள், மரக்கறி கன்றுகள் மற்றும் விதை வகைகள் போன்றனவற்றை இந்தநாற்றுமேடையிலிருந்து விலைக்குவாங்க முடியும்.

இதற்கு மேலதிகமாக, மரக்கறி மற்றும் பூ பசளைகள்,சேதனப் பசளை,பூச்சி விலக்கி,விவசாய உபகரணங்கள்என்பனவற்றை இந்த நிலையத்திலிருந்து விலைக்கு வாங்கலாம். அத்துடன், பயிர்ச் செய்கை சம்பந்தமான அறிவுரைகளையும் இந்த நிலையத்திலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இவ்வாண்டில் இச்செயற்றிட்டம் பொருட்டானசெயற்பாட்டு செலவினம் ரூ.7.696 மில். ஆக இருந்ததுடன் செயற்பாட்டுவருமானமாகரூ.9.504 மில். ஈட்டப்பட்டிருந்தது. அத்துடன், ஆண்டில் தேறிய இலாபம் ரூ. 1.465 மில். ஆகும். இத்தரவுகளின்படி, இச்செயற்றிட்டம் கடந்த ஆண்டினை விட முன்னேற்றத்தை கண்டுள்ளது.

.





(நாற்றுமேடை மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இலவச அறிவுரை வழங்குதல்)

## 2. நாற்றுமேடை–தெகிவளை

நகர மக்களுக்கு வீட்டுத்தோட்ட அபிவிருத்தி பொருட்டு தேவையான அனைத்து உள்ளீடுகளையும் சலுகை விலையில் வழங்குவதற்காக இந்த நாற்றுமேடை

ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாற்றுமேடையிலிருந்துஎல்லா வகையிலான பூக் கன்றுகள்,அரிதாகக் கிடைக்கக்கூடிய பழக்கன்றுகள், மரக்கறி கன்றுகள் மற்றும் விதை வகைகள் போன்றனவற்றை இந்த நாற்றுமேடையிலிருந்து விலைக்கு வாங்க முடியும். இதற்கு மேலதிகமாக, மரக்கறி மற்றும் பூ பசளைகள், சேதனப் பசளை,பூச்சி விலக்கி, விவசாய உபகரணங்கள்என்பனவற்றை இந்த நிலையத்திலிருந்து விலைக்கு வாங்கலாம். இவ்வருடத்தில் செயற்பாட்டு வருமானமாகரூ.4.275 மில். ஈட்டப்பட்டிருந்ததுடன் ரூ.3.796 மில். செயற்பாட்டு செலவினம் உறப்பட்டிருந்தது. தேறிய இலாபமாகரூ. 1.309 மில்.பெறப்பட்டிருந்தது.

## 3. விவசாய உற்பத்திப்பொருள் விற்பனைக்கூடம் – தெகிவளை

நகர மக்கள் குறைந்த வசதியுடன் அதிக விளைச்சலைப் பெறுதல் மற்றும்மக்கள் மத்தியில் நஞ்சற்ற உணவுகளை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த விற்பனைக்கூடத்தின்மூலம் தேசிய உற்பத்தியாளர்களினால் தயாரிக்கப்பட்ட உணவு உற்பத்திகள், பாரம்பரிய அரிசி வகைகள் அத்துடன் எமது நிறுவனத்தால் உற்பத்திசெய்யப்படும் மவ்போஷ, சுவபோஷ, தோசை மா, விசேட அரிசி மா என்பனவற்றை விலைக்கு வாங்க முடியும். இதற்கு மேலதிகமாக,தேசிய முறையில் தயாரிக்கப்பட்ட காலை மற்றும் மதிய உணவுகளை சலுகை விலையில் வாங்குவதற்கு வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளது. தெகிவளைமிருகக்காட்சிசாலையினுள்ளும் இத்தகைய விற்பனைக்கூடம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனைக்கூடத்தின்மூலம் குறிந்த விலையில் தரமான உணவுகள் வாடிக்கையாளர்களுக்குவழங்கப்படுகின்றன. இந்தஆண்டில் இச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டுசெலவினம்ரூ.42.57 மில். ஆகும்.செயற்பாட்டுவருமானம் ரூ.42.421மில்.ஆகும்.அதன்படி, ஆண்டின் தேறிய இலாபம் ரூ. 0.245 மில். ஆகும்.

## 4. புத்தல பண்ணை அபிவிருத்தி

இச்செயற்றிட்டம் 1986ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆண், பெண் விவசாயிகள் இந்த பண்ணையினுள் செய்கை நடவடிக்கைக்காக பயிற்றுவிக்கப்பட்டிருப்பதுடன் பின்னர் சேதன பசளை தயாரிப்பு பற்றிய பயிற்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. சேதன பசளை தயாரிப்பே 2016 ஆம் ஆண்டில் புத்தல பண்ணையில்பிரதானமாக மேற்கொள்ளப்பட்டது. இவ்வருடத்தில் இந்தச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டுவருமானம்ரூ. 9.16 மில்.ஆக இருந்ததுடன்செயற்பாட்டு செலவினம் ரூ.1.09 மில். ஆகும்.எதிர்காலத்தில், சேதன பசளைகளுக்கு மேலதிகமாக தும்புச்சோறு மற்றும் சாடி கலவைகளும் உற்பத்திசெய்து எமது நிறுவனத்தின் விற்பனைக்கூடங்கள் ஊடாக சலுகை விலையில் மக்களுக்கு விற்பனைசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## 5. தணமல்வில பண்ணை அபிவிருத்தி

தணமல்வில பண்ணையிலும்நீண்ட காலமாக சிறு அளவிலான செய்கை நடவடிக்கைகள் பேணப்பட்டுவருவதுடன் அடுத்த வருடத்திலிருந்து சேதன பசளை உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## 6.ஹெல்தி புட் உணவகம் - நாரஹேன்பிட்டி

இந்தச் செயற்றிட்டமானது 2014.04.01ஆம் திகதியில் நகர்வாழ்நுகர்வோர்களுக்கு சலுகை விலையில் தேசிய உணவுகளை வழங்குவதனை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.இங்கு தேசிய உணவுபட்டியலுக்கு ஏற்ப உணவுகள்தயாரிக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக,நிறுவனத்தின் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களினால் தயாரிக்கப்பட்ட தேசிய உற்பத்திகளும் விற்பனை செய்யப்படுகின்றன. 2016 ஆம்ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டுவருமானம்ரூ.11.015 மில். ஆக இருந்ததுடன் செயற்பாட்டுசெலவினம் ரூ.14.634மில். ஆகும்.அத்துடன்,இச்செயற்றிட்டத்திற்கு ஏற்புடையதாக 2016ஆம்ஆண்டில் தேறிய நட்டம் ரூ. 3.812 மில். ஆகும்.இச்செயற்றிட்டம் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்குவதினால் மீண்டும் மறுசீரமைத்து அடுத்த வருடத்திலிருந்து இலாபமீட்டும் வகையில் புதிய தோற்றத்தில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 7. சுவபோஷ போசாக்கான உணவு,அரிசி மா, தோசை மா, மவ்போஷ செயற்றிட்டம்

பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை பிரபல்யப்படுத்தும் நோக்கில் அரிசி மா மற்றும் தோசை மா செயற்றிட்டம்ஆரம்பிக்கப்பட்டதுடன், இச்செயற்றிட்டம் கலன்குட்டிய தொழிற்சாலையினுள் செயற்படுத்தப் படுகின்றது. மவ்போஷ,சுவபோஷ,அரிசி மா, தோசை மா செயற்றிட்டம்நிறை குறைந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு போசாக்குப் பொதி வழங்கும் செயற்றிட்டம் மஹிந்த சிந்தனை எண்ணக்கருவின்படி ஆரம்பிக்கப்பட்டது.இந்த உற்பத்திநடவடிக்கைகள் கமத்தொழில் திணைக்களத்துக்குரிய உணவு ஆராய்ச்சி அலகிலும் கலன்குட்டிய தொழிற்சாலையிலும் தயாரிக்கப்படுகின்றன.

## 8. சோளச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டம்

மேலதிக உணவுப் பயிர்கள் மேம்பாட்டு வேலைத்திட்டமொன்றாக அனுராதபுர மாவட்டத்தில் சோளச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இச்செயற்றிட்டம்ஆரம்பிக்கப்பட்டது. இங்கு அடிப்படை குறிக்கோள்கள் யாதெனில் கமத்தொழில் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விதை வகைகளை செய்கையாளர்களிடையே பிரபல்யப்படுத்துதல், செய்கைக்கான மண் பாதுகாப்பு முறைகள் பற்றி செய்கையாளர்களை விழிப்பூட்டுதல்மூலம் அனுராதபுர மாவட்டத்தில் சோள அறுவடையை அதிகரித்தல் என்பனவாம். இங்கு விவசாயி

அமைப்புக்கள் ஊடாக எமது நிறுவனத்தின் அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் சோளம் விலைக்கு வாங்கப்பட்டன. இச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டுசெலவினம்ரூ.16.08 மில். ஆகும்.செயற்பாட்டுவருமானம் ரூ.16.14மில்.ஆகும்.அதன்படி, ஆண்டின் தேறிய இலாபம் ரூ. 0.11 மில். ஆகும்.




(விவசாயி அமைப்புக்களிடமிருந்து சோளம் வாங்கப்பட்டு அவர்களுக்கு காசோலை வழங்குதல்)

## 9. அரிசி பெருக்கும் முன்னோடி செயற்றிட்டம்

ஆரோக்கிய வாழ்வினை உறுதிப்படுத்துதல், அனைவரும் எல்லா வயதிலும் நல்வாழ்வினை மேம்படுத்துதல் மற்றும் பட்டினியை முடிவுறுத்துதல், உணவு பாதுகாப்பு, உயர் போசணையை பெறுவதல் மற்றும் நிலைபேறான கமத்தொழிலை மேம்படுத்துதல் போன்ற குறிக்கோள்களை எய்தும் முகமாக முன்னோடி அரிசி பெருக்கும் செயற்றிட்டம் சனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலின் பேரில் சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உலக உணவு அமைப்பின் நிதி பங்களிப்புடன் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையினால் செயற்படுத்தப்பட்டது.

மொனராகலை மற்றும் கண்டி பாடசாலை பிள்ளைகள் பொருட்டு புலனுணர்வு சோதனையொன்று எமது சபையினாலும் பேராதனை பல்கலைக்கழகத்தினாலும் செயற்படுத்தப்பட்டது. அரிசி இலங்கையின் பிரதான உணவாகும் என்பதுடன் அதற்கு இரும்புச்சத்து மற்றும் போலிக்கமிலம் ஆகியவற்றை சேர்த்து பெருக்குவதன்மூலம் குருதிச்சோகை நோயைக் குறைத்து ஆரோக்கியமான இனமொன்றை உருவாக்குதல் இந்த முன்னோடி செயற்றிட்டத்தின் குறிக்கோள்களாகும் என்பதுடன் இதற்காக உலக உணவு அமைப்பிடமிருந்து ரூ. 0.479 மில். கிடைத்திருப்பதுடன் ரூ.0.12 மில். இவ்வருடத்தில் செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்றிட்டமானது இலாபம் உழைக்கும் நோக்குடன் அன்றி போசாக்கினை மேம்படுத்தும் நோக்கில் முன்னோடி செயற்றிட்டமாக மேற்கொள்ளப்படுகிறது.




(உலக உணவு வேலைத்திட்டத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடுதல்)

## 10.குறைபாவனை பழங்களை பயன்படுத்தி பழப்பானம் RTS (Ready to serve drink) தயாரித்தல்

குறை பாவனை பழ நுகர்வினை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தல் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் நோக்கில்முன்னோடி செயற்றிட்டமாக இது ஆரம்பிக்கப்பட்டது.இங்கு வெரளிக்காய்,சீதாப்பழம் மற்றும் மா ஆகியன பிரதான பழங்களாக பயன்படுத்தப்படுவதுடன் இந்த பழக் குடிவகைகள்கண்ணோறுவை உணவு ஆராய்ச்சி அலகில் தயாரிக்கப்படுகின்றன. இதற்காக உயிர் பல்வகைமை,உணவு மற்றும் போசாக்கு அமைப்பிடமிருந்து ரூ. 0.14 மில். கிடைத்திருப்பதுடன் ரூ.0.085 மில். செலவிடப்பட்டிருந்தது. வருமானமாகரூ.0.034 மில். ஈட்டப்பட்டுள்ளது.









(வெரளிக்காய் மற்றும்சீதாப்பழ பானம் தயாரித்தலும் இறுதி உற்பத்தியும்)

## 11. பாரம்பரிய நெல் கொள்வனவு செயற்றிட்டம்

ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் அனைவருக்கும் போஷாக்கான உணவுஎனும் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை எய்தும் முகமாக பாரம்பரிய நெல் உற்பத்தி செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை பூராகவும் பரவிவரும் தொற்றாத நோய்களை தடுக்கும் பொருட்டு இந்த அரிசி நுகர்வு முக்கியமானதாகும். இங்கு அனுராதபுர மாவட்டத்தில் பாரம்பரிய நெல் செய்கைபண்ணும் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்து அவற்றை கலன்குட்டிய தொழிற்சாலையில் அரிசியாக மாற்றி தெகிவளை,நாரஹேன்பிட்டி விற்பகைக்கூடங்கள் மற்றும் ஹெல்தி புட் ஷொப் என்பனவற்றினூடாக விற்கப்படுகின்றது. இச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டுசெலவினம்ரூ.6.54 மில். ஆகும்.வருமானம் ரூ.4.467மில். ஆவதுடன் அதன்படி, ஆண்டின் தேறிய இலாபம் ரூ. 0.42 மில்.கிடைத்துள்ளது.

## 12. வீட்டுத்தோட்ட செய்கைக்கு கைகொடுத்தல்(மிளகாய் கன்று செயற்றிட்டம்)

குறைந்த இடவசதியுடனான நகர மக்களுக்கு செய்கை பண்ணுவதற்கு வாய்ப்பு அளித்தல் மற்றும் தனது கையினால் நடப்பட்ட பயிரிலிருந்து சுவைத்துப் பார்ப்பதன்மூலம் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் மனத்திருப்தியை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நகர மக்களுக்கும் அடுக்குமாடிகளில் வாழும் மக்களுக்கும் ஒரு வீட்டுக்கு 6 மிளகாய் கன்றுகள் வீதம் 1500 வீடுகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டன.இச்செயற்றிட்டம் பொருட்டு ரூ.0.618 மில். தொகை கமத்தொழில்அமைச்சிடமிருந்து கிடைத்திருப்பதுடன் ரூ.0.519 மில். செலவிடப்பட்டிருந்தது.





(மிளகாய் கன்று செயற்றிட்டத்தின் பல்வேறு கட்டங்கள்)

## 13. அதிகாரமளிக்கப்பட்ட விற்பகைக்கூடங்களை தாபித்தல்(ஹெல்தி புட் ஷொப்)

நச்சுத் தன்மையற்ற தரத்தில் உயர்ந்த தேசிய உணவுகளை நுகர்வோருக்கு இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்குதல் இச்செயற்றிட்டத்தின்மூலம் எதிர்பார்க்கப்படுவதுடன் உள்நாட்டு அரிசி, தானிய வகைகள் மற்றும் சிறிய நடுத்தர அளவு உற்பத்தியாளர்களின் 200 எண்ணிக்கையிலான பல்வேறு உற்பத்திகள் இந்த விற்பகைக்கூடங்கள் ஊடாக நுகர்வோருக்கு வழங்கப்படுகின்றன. இலங்கை பூராகவும் இத்தகைய விற்பகைக்கூடங்கள் சுமார் 100 திறப்பதற்கு உத்தேசித்துள்ளதுடன் இதுவரையில் 09 விற்பகைக்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.







## 14. (2016 – "Sri Lanka Food Festival") உணவு கொண்டாட்டம்

வறுமையை ஒழித்தல்எனும் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளின் கீழ் 2016 ஆம் ஆண்டில் விகார மகாதேவி பூங்காவுக்கு அருகிலுள்ள கிறீன் பாத் எனும் இடத்தில் "Sri Lanka Food Festival" (உணவு கொண்டாட்டம்) நடாத்தப்பட்டது. தீங்குத்தன்மையான உணவுகளுக்குப் பதிலாக நச்சுத் தன்மையற்ற தேசிய உணவுப் பாவனையை மீண்டும் மக்களுக்கு பழக்குவதற்காக இலங்கையிலுள்ள 09 மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அந்தந்த மாகாணத்துக்கே உரிய பழமைமிக்க உணவு வகைககளை பிரயோகரீதியாக தயாரித்துக் கொள்ளும்விதம் மற்றும் அவற்றை சுவைத்துப் பார்ப்பதற்கும் இங்கு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.





(கண்காட்சியை காண வந்த மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற தேசிய உணவுகள் வழங்கப்பட்டமை)

அத்துடன்,நச்சுத் தன்மையற்ற பாரம்பரிய அரிசி மற்றும் சிறிய நடுத்தர அளவு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை விலைக்கு வாங்குவதற்கான ஹெல்தி புட் ஷொப் விற்பனைக்கூடமொன்றும் இங்கு திறந்து வைக்கப்பட்டது. அதேபோன்று, உணவுகள் பற்றிய பாடசாலை பிள்ளைகளை விழிப்பூட்டும் சில நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.






(கௌரவ கமத்தொழில் அமைச்சர் கண்காட்சி இடத்தை அவதானிக்கும் நடவடிக்கை)

## 15. திறைசேரி நிதியேற்பாடுகள்

| | வரவுசெலவுத்திட்ட நிதியேற்பாடு 2015 (ரூ.மில்.) | பெற்ற மானியம் (ரூ.மில்.) | உண்மையான செலவினம் (ரூ.மில்.) | மிகை செலவினம் (ரூ.மில்.) |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவு | 54.154 | 38.00 | 44.063 | 16.154 |
| மூலதனச்செலவு | பொது திறைசேரியிடமிருந்து நிதி கிடைக்கவில்லை | | | |
| மொத்தம் | 54.154 | 38.00 | 44.063 | 16.154 |

# வருடாந்த கணக்கு அறிக்கை- **2016**

# இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

இந்த நிதி நிலமைக்கூற்று மற்றும் நிதிச் செயலாற்றுகைக்கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருப்பதுடன் இலங்கை பொதுத் துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வரலாற்றுக் கிரய எண்ணக்கரு அடிப்படையிலும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

.

**கணக்கீட்டுக் கொள்கைகள் :**

1. தேய்மானம் கணக்கிடல் சொத்துக்களைகொள்வனவு செய்த திகதியிலிருந்து மேற்கொள்ளப்படுவதுடன்,எல்லா சொத்துக்களும் பயன்பாட்டு ஆயுட்காலம் முழுவதும் தேய்மானம் இடப்பட்டுள்ளது.

2. பெற வேண்டிய மீதிகள், அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் என்பன பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ளன.

3. இனங்காணப்பட்ட எல்லா பொறுப்புக்கள் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4. பணிக்கொடை ஏற்பாடானது பணிக்கொடைக்கு உரித்தான ஒவ்வொரு ஊழியரது சேவைக் காலத்தை அடிப்படைக்கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது.

5 அறிந்த எல்லா பொறுப்புக்கள் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னரே செலவிலும் மிஞ்சிய வருமானம் கணக்கிடப்பட்டுள்ளது.

6 கொள்விலை மற்றும் தேறப்பட்ட பெறுமதி ஆகிய பெறுமதிகளில் மிகவும் குறைந்த பெறுமதியிலேயே இருப்பு கணக்கிடப்படுகிறது என்பதுடன் பின்வரும் இருப்புகள் பொருட்டான கிரயம் கீழே குறிப்பிடப்பட்ட முறைகளின் கீழ் கணக்கிடப்படுகிறது.

   a. மூலப்பொருள் - முதல் பெற்று முதல் விநியோகித்தல் முறையில் உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.
   b. குறை வேலை இருப்பு – நேர் மூலப்பொருள் கிரயத்தில் காட்டப்படுகிறது.
   c. முடிவுப்பொருள் இருப்பு – நேர் மூலப்பொருள், மாறும் மேந்தலைச் செலவு மற்றும் நேர் சம்பள உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.
   d. நுகர்வுப்பொருள்கள் - உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.

7. அரசிடமிருந்து பெற்ற நிதியேற்பாடு வருமானக் கூற்றில் வருமானமாக பிரத்தியேகமாககாட்டப்பட்டிருப்பதுடன்,செலவு விடயங்களும்பிரத்தியேகமாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை**

1. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை 2016 ஆம் ஆண்டில் பின்வரும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை மேற்கொண்டது.

| செயற்றிட்டம் | நிதியளிக்கப்பட்டது | செயற்றிட்ட அமைவிடம் |
|---|---|---|
| பண்ணை அபிவிருத்தி - தணமல்வில | சுய நிதியம் | தணமல்வில |
| பண்ணை அபிவிருத்தி – புத்தல | சுய நிதியம் | புத்தல |
| பாரம்பரிய அரிசி செயற்றிட்டம் | சுய நிதியம் | கலன்குட்டி |
| நாற்று மேடை – தெகிவளை | சுய நிதியம் | தெகிவளை |
| நாற்று மேடை - பிரதான அலுவலகம் | சுய நிதியம் | நாரஹேன்பிட்டி |
| மிளகாய் கன்று செயற்றிட்டம் | கமத்தொழில் அமைச்சு | கொழும்பு |
| நகர வீட்டுத்தோட்ட அபிவிருத்தி | கமத்தொழில் திணைக்களம் | நாரஹேன்பிட்டி |
| அரிசி பெருக்கும் செயற்றிட்டம் | உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் | கலன்குட்டி |
| குறைபாவனை பழங்களிலிருந்துபழப்பானம் தயாரித்தல் | கமத்தொழில் திணைக்களம் | கன்னோறுவை |
| விவசாயி வாரம் | கமத்தொழில் அமைச்சு | கிறீன் பாத் |
| ஹெல்தி புட் விற்பகைக்கூடங்கள் மற்றும்ஹெல்தி புட் பசார் | சுய நிதியம் | கொழும்பு |
| சோளம் செயற்றிட்டம் | விவசாயி நம்பிக்கைபொறுப்பு நிதியம் | கலன்குட்டி |
| அரிசி மா செயற்றிட்டம் | சுய நிதியம் | கலன்குட்டி |
| சோயா செயற்றிட்டம் | விவசாயி நம்பிக்கைபொறுப்பு நிதியம் | உடுல்தெனிய |
| சுவபோஷ போசாக்குப் பெக்கற் | சுய நிதியம் | கன்னோறுவை |
| மவ்போஷ போசாக்குப் பெக்கற் | சுய நிதியம் | கன்னோறுவை |
| சேதனப் பசளை பாவனையை பிரபல்யப்படுத்தல் | சுய நிதியம் | புத்தல |
| விவசாயி உற்பத்திப்பொருள் விற்பனைக்கூடம் – தெகிவளை | சுய நிதியம் | தெகிவளை |
| ஹெல்தி புட் உணவகம் | சுய நிதியம் | நாரஹேன்பிட்டி |

2. பின்வரும் வங்கி நடைமுறைக் கணக்குகள்இந்தஆண்டில் இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தன.

194125 - திறைசேரியிலிருந்து பெறும்நிதியேற்பாடு

கமத்தொழில் அமைச்சு,உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கமத்தொழில் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து பெறும் நிதியேற்பாடு.

பண்ணை அபிவிருத்தி–புத்தல பண்ணை அபிவிருத்தி - தணமல்வில,அம்பலாந்தோட்டை பண்ணைஅபிவிருத்தி,சுவபோஷ செயற்றிட்டம், மவ்போஷ செயற்றிட்டம், பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை மேம்படுததும் செயற்றிட்டம், நாற்று மேடை, தெகிவளைவிற்பனைக்கூடம், ஹெல்தி புட் உணவகம்,கொம்போஸ்ட் செயற்றிட்டம்.

337100196138295 - தெகிவளைவிற்பனைக்கூடத்தின் வருமானம்

78641885 - ஹெல்தி புட் பசார்

3. ஒவ்வொரு செயற்றிட்டம் பொருட்டு பிரத்தியேக பேரேகள் பேணப்படுகின்றன.

# இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

## 2016 திசம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று

| விபரம் | குறிப்பு | **2016ரூ.** | **2015ரூ.** |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| ***நடைமுறையல்லாத சொத்துக்கள்*** | | | |
| **ஆதனம்,பொறித்தொகுதி, உபகரணம்** | 1 | ***337,395,749.18*** | ***342,006,088.38*** |
| காணி | | 307,200,000.00 | 307,200,000.00 |
| கட்டடம் | | 16,078,696.90 | 16,373,609.27 |
| மோட்டார் வாகனங்கள் | | 3,900,000.00 | 5,875,000.00 |
| இயந்திரமும் பொறியும் | | 1,587,339.79 | 2,177,383.41 |
| தளபாடமும் பொருத்துக்களும் | | 992,168.92 | 1,346,928.26 |
| அலுவலக உபகரணங்கள் | | 1,690,775.58 | 1,962,203.81 |
| விவசாய உபகரணங்கள் | | 281,000.00 | 443,000.00 |
| தோட்ட உபகரணங்கள் | | 331,302.03 | 200,000.00 |
| பிற உபகரணங்கள் | | 1,675,256.08 | 2,146,815,.37 |
| கணினியும் பாகங்களும் | | 725,195.01 | 1,084,277.38 |
| தற்காலிக கட்டடம் | | 2,015,988.21 | 2,127,987.55 |
| அளவை உபகரணங்கள் | | 69,626.66 | 100,183.33 |
| | | | |
| ***கட்புலனாகா சொத்து*** | | | |
| மென்பொருள் | | 848,400.00 | 968,700.00 |
| | | | |
| ***நிதிச் சொத்து*** | | ***806,118.84*** | ***855,088.71*** |
| சேமிப்பு வைப்பு | | 806,118.84 | 774,478.21 |
| கடன் | | - | 80,610.50 |
| | | | |
| ***நடப்புச் சொத்துக்கள்*** | | ***28,230,216.97*** | ***8,064,308.68*** |
| வைப்புக்கள் | | 201,816.50 | 201,816.50 |
| இருப்பு | | 16,262,291.19 | 4,874,033.32 |
| கடன்படுநர் | | 938,993.77 | 979,476.77 |
| முற்பணங்கள் | | - | 21,900.00 |
| வருமதிகள் | | 10,606,619.17 | 317,900.51 |
| கையிலுள்ள, வங்கியிலுள்ள காசு | | 220,496.34 | 1,669,181.58 |
| | | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **366,432,084.99** | **350,925,485.77** |

| | | | |
|---|---|---|---|
| **உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | ***333,666,727.38*** | ***334,367,991.14*** |
| நிதிய மீதி | | 374,870,896.72 | 375,001,390.22 |
| திரட்டு நிதியம் | | (41,204,169.34) | (40,633,399.08) |
| | | | |
| ***நடைமுறையல்லாத பொறுப்புக்கள்*** | | ***13,775,284.82*** | ***10,245,455.80*** |
| இளைப்பாறல் பணிக்கொடை கடப்பாடு | | 3,875,284.82 | 4,845,455.80 |
| நடு தவணைக் கடன் | | 9,900,000.00 | 5,400,000.00 |
| | | | |
| **நடப்புப் பொறுப்புக்கள்** | | ***18,990,072.79*** | ***6,312,038.83*** |
| குறுங்காலக் கடன் | | - | 187,500.06 |
| பிடிப்புப் பணம் | | 145,701.45 | 668,747.75 |
| மீள செலுத்த வேண்டிய வைப்பு | | 1,073,000.00 | - |
| அட்டுறு செலவுகள் | | 17,771,371.34 | 5,455,791.02 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | **366,432,084.99** | **350,925,485.77** |

# இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

## 2016 திசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| விபரம் | குறிப்பு | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | **73,426,388.30** | **41,753,482.54** |
| திறைசேரி/அமைச்சு மானியங்கள் | | 61,112,012.18 | 38,720,477.23 |
| பிற செயற்பாட்டு வருமானம் | 2 | 11,525,055.49 | 2,507,011.58 |
| சேமிப்பு கணக்கு மீதான வட்டி | | 31,640.63 | 28,103.73 |
| சொத்து விற்னைமூலம் கிடைத்த பணம் | | 2,314,950.00 | 1,773,392.00 |
| சொத்து விற்னைப் பணத்தை திறைசேரிக்கு அனுப்புதல் | | (2,508,700.00) | (1,771,892.00) |
| பிற வருமானங்கள் | | 951,430.00 | 496,390.00 |
| | | | |
| **செலவினம்** | | **75,769,730.36** | **55,678,542.06** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | | 33,912,586.68 | 36,004,207.89 |
| பிரயாணச் செலவுகள் | | 681,562.05 | 148,900.95 |
| வழங்கல்களும் தேவைப்பாடுகளும் | | 5,339,316.35 | 1,257,729.96 |
| நிலையான சொத்து பழுதுபார்தலும் பராமரிப்பும் | | 4,272,608.03 | 4,312,188.80 |
| மாற்றல், தொடர்பாடல், பயன்பாடு மற்றும் பிற சேவை | | 31,563,657.25 | 13,955,514.46 |
| | | | |
| **செலவை மிஞ்சிய வருமானம்/ மிகை (குறைவு)** | | **(2,343,342.06)** | **(13,925,059.52)** |

# இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

## 2016 திசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | குறிப்பு | 2016 ரூ. | 2015ரூ. |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான /(பயன்படுத்திய) காசுப்பாய்வு** | | | |
| வருமான வரிக்கு முன் தேறிய இலாபம்/நட்டம் | | (2,343,342.06) | (13,925,059.52) |
| சீராக்கங்கள் | | | |
| தேய்மானம் | 1 | 5,449,799.62 | 7,018,714.21 |
| வாகன அகற்றுதல் /மாற்றுதல் தேய்மானம் | | (1,006,250.00) | (1,658,500.00) |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் அகற்றுதல் /மாற்றுதல | | 1,200,000.00 | 1,658,500.00 |
| விவசாயிகளின் கடன் பதிவழித்தல் | | 80,610.50 | - |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான வட்டி வருமானம் | | (31,640.63) | (28,103.73) |
| முந்திய கால சீராக்கங்கள் | | 1,642,078.30 | 37,387.00 |
| இளைப்பாறல் பணிக்கொடை கடப்பாட்டுக்கான ஏற்பாடு | | (970,170.98) | 1,918,762.60 |
| தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன் செயற்பாட்டு இலாபம் | | **4,021,084.75** | **(4,978,299.44)** |
| இருப்புகளில் (அதிகரிப்பு) /குறைவு | | (11,388,257.87) | 4,735,519.16 |
| வியாபார மற்றும் பிற வருமதிகளில் (அதிகரிப்பு) /குறைவு | | (10,226,335.66) | 295,367.80 |
| வியாபார மற்றும் பிற சென்மதிகளில் அதிகரிப்பு | | 12,865,534.02 | (638,209.35) |
| செயற்பாட்டிலிருந்து உருவாக்கிய காசு | | (8,749,059.51) | 4,392,677.61 |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு | | **(4,727,974.76)** | **(585,621.83)** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) காசுப் பாய்வு** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் கொள்ளல் | 1 | (1,033,210.42) | (5,527,463.03) |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் அகற்றுதல்/மாற்றுதல் | | 2,508,700.00 | - |
| சொத்து விற்னைப் பணத்தை திறைசேரிக்கு அனுப்புதல் | | (2,508,700.00) | - |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்வு** | | **(1,033,210.42)** | **(5,527,463.03)** |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்வு** | | | |
| பெற்ற நிதியம் | | 61,112,012.18 | 43,720,477.23 |
| மானியம் | | (61,112,012.18) | (38,720,477.23) |
| பெற்ற கடன் | | 20,000,000.00 | 3,000,000.00 |
| கடன் மீள செலுத்தல் | | (15,687,500.06) | (287,499.97) |
| | | **4,312,499.94** | **7,712,500.03** |

| | | | |
|---|---|---|---|
| காசும் காசுக்கு சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு /(குறைவு) | | (1,448,685.24) | 1,599,415.17 |
| வருட ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும் | | 1,669,181.58 | 69,766.41 |
| வருட இறுதி காசும் காசுக்குச் சமமானவைகளும் | | **220,496.34** | **1,669,181.58** |
| குறிப்பு: **- A** | | | |
| வங்கி மீதி | | 1,669,181.58 | 69,766.41 |
| கையிலுள்ள காசு | | - | - |
| | | **1,669,181.58** | **69,766.41** |

## இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

**2016 திசம்பர் 31இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமைமூலதனத்தில் மாற்றம் பற்றிய கூற்று**

| | **மீள்விலைமதிப்பிடல் நிதியம்** ரூ. | **நிதிய மீதி**ரூ. | **திரட்டு நிதியம்** ரூ. | **மொத்தம்** ரூ. |
|---|---|---|---|---|
| 01.01.2016இல் மீதி | 328,671,316.14 | 46,330,074.08 | (40,633,399.08) | 334,367,991.14 |
| | | | | |
| பெற்ற நிதியம் | | 61,112,012.18 | | 61,112,012.18 |
| | | | | |
| மானியம் | | (61,112,012.18) | | (61,112,012.18) |
| | | | | |
| முந்திய கால சீராக்கம் | | (130,493.50) | 1,772,571.80 | 1,642,078.30 |
| | | | | |
| குறை ஒதுக்கீடு | | - | - | - |
| | | | | |
| தேறிய மிகை(குறை) | | | (2,343,342.06) | (2,343,342.06 |
| | **328,671,316.14** | **46,199,580.58** | **(41,204,169.34)** | **333,666,727.38** |

## குறிப்பு01

| சொத்து வகுதி | காணியும் கட்டடமும் | மோட்டார் வாகனம் | பொறியும் இயந்திரமும் | அலுவலக உபகரணம் | தளபாடமும் பொருத்துக்களும | விவசாய உபகரணம | தோட்ட உபகரணம | பிற உபகரணம் | புகைப்பட, சினிமா உபகரணம | தற்காலிக கட்டடம் | அளவை உபகரணம | கணினியும் மென்பொருளும் | பிற முதலீடுகள் | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 201601.01 இல் மீதி | **323,573,609.27** | **5,875,000.00** | **2,177,383.41** | **1,962,203.81** | **1,346,928.26** | **443,000.00** | **200,000.00** | **2,146,815.37** | **-** | **2,127,987.55** | **100,183.33** | **1,084,277.38** | **968,700.00** | **342,006,088.38** |
| சேர்வனவு | 590,970.42 | - | - | 149,850.00 | 4,500.00 | - | 197,990.00 | - | - | - | - | 89,900.00 | - | 1,033,210.42 |
| அகற்றல்/ மாற்றல் (நிலையான சொத்து) | - | (1,200,000.00) | - | - | - | - | - | - | - | - | - | - | - | (1,200,000.00) |
| அகற்றல்/ மாற்றல் (இதுவரை தேய்விட்ட பெறுமதி) | - | 1,006,250.00 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1,006,250.00 |
| ஆண்டுக்கான தேய்மானம் | (885,882.79) | (1,781,250.00) | (590,043.62) | (421,278.23) | (359,259.34) | (162,000.00) | (66,687.97) | (471,559.29) | - | (111,999.34) | (30,556.67) | (448,982.37) | (120,300.00) | (5,449,799.62) |
| தேறிய மீள் விலைமதித்தல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2016.12.31 இல் தேறிய பெறுமதி | 323,278,696.90 | 3,900,000.00 | 1,587,339.79 | 1,690,775.58 | 992,168.92 | 281,000.00 | 331,302.03 | 1,675,256.08 | - | 2,015,988.21 | 69,626.66 | 725,195.01 | 848,400.00 | 337,395,749.18 |
| மீள் விலைமதித்தல் மிகை மொத்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மீள் விலைமதித்தல் குறை மொத்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மொத்த உச்ச பெறுமதி | 325,110,328.42 | 6,500,000.00 | 2,888,780.00 | 2,506,071.78 | 1,683,846.75 | 639,500.00 | 397,990.00 | 2,613,350.00 | 3,540.00 | 2,239,986.89 | 130,740.00 | 1,676,160.00 | 1,089,000.00 | 347,479,293.84 |
| திரண்ட தேய்மானம் | (1,831,631.51) | (2,600,000.00) | (1,301,440.21) | (815,296.20) | (691,677.83) | (358,500.00) | (66,687.97) | (938,093.92) | (3,540.00) | (223,998.68) | (61,113.34) | (950,964.99) | (240,600.00) | (10,083,544.65) |
| தேறிய உச்ச பெறுமதி | **323,278,696.90** | **3,900,000.00** | **1,587,339.79** | **1,690,775.58** | **992,168.92** | **281,000.00** | **331,302.03** | **1,675,256.08** | **-** | **2,015,988.21** | **69,626.66** | **725,195.01** | **848,400.00** | **337,395,749.18** |

**நடைமுறை அல்லாத சொத்துக்கள**

**குறிப்பு 02 :வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்குகள்**

2.1 **தெகிவளை விற்பனைக்கூடம்**

**2016.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|
| விற்பனை வருமானம் | **42,421,955.67** | **44,427,486.94** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 1,574,895.14 | 1,481,735.70 |
| கொள்வனவு | 35,564,265.13 | 36,489,702.80 |
| போக்குவரத்து | 64,422.00 | 62,060.00 |
| இறுதி இருப்பு | (1,971,127.64) | (1,574,895.14) |
| | 35,232,454.63 | 36,458,603.36 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **7,189,501.04** | **7,968,883.58** |
| பொதுச் செலவுகள் | 6,944,136.70 | 6,519,382.34 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **245,364.34** | **1,449,501.24** |

2.2 **நாற்று மேடை- பிரதான அலுவலகம்**

**2016.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|
| விற்பனை வருமானம் | **9,504,277.40** | **7,828,601.61** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 1,059,868.78 | 456,182.00 |
| கொள்வனவு | 5,885,065.35 | 5,073,167.50 |
| இறுதி இருப்பு | (717,087.84) | (1,059,868.78) |
| | 6,227,846.29 | 4,469,480.72 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **3,276,431.11** | **3,359,120.89** |
| பொதுச் செலவுகள் | 1,810,963.94 | 2,012,214.42 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **1,465,467.17** | **1,346,906.47** |

2.3 **நாற்று மேடை- தெகிவளை**

**2016.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016ரூ.** | **2015 ரூ.** |
|---|---|---|
| விற்பனை வருமானம் | **4,275,431.00** | **3,417,684.50** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 126,271.80 | 351,247.72 |
| கொள்வனவு | 2,872,271.00 | 2,426,249.00 |
| இருப்பு சேதம் | - | - |
| இறுதி இருப்பு | (956,813.78) | (126,271.80) |
| | 2,041,729.02 | 2,651,224.92 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **2,233,701.98** | **766,459.58** |
| பொதுச் செலவுகள் | 924,270.40 | 906,810.10 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **1,309,431.58** | **( 140,350.52)** |

2.4 **பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை பிரபல்யப்படுத்தும் செயற்றிட்டம்- கலன்குட்டிய 2016.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016ரூ.** | **2015ரூ.** |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 442,681.10 | 3,352,991.90 |
| கொள்வனவு | 1,237,135.00 | 454,560.73 |
| இருப்பு சேதம் | (18,525.00) | (3,546.00) |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | - | (442,681.10) |
| மூலப்பொருள் செலவு | 1,661,291.10 | 3,361,325.53 |
| நேர் சம்பளம் | - | - |
| போக்குவரத்து | - | - |
| ஆரம்ப இருப்பு - குறைவேலை | - | - |
| இருப்பு சேதம் | | |
| இறுதி இருப்பு - குறைவேலை | (124,440.00)<br>- | - |
| உற்பத்தி செலவு | 1,536,851.10 | 3,361,325.53 |
| விற்பனை வருமானம் | **1,412,650.32** | **665,226.03** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |

| | | |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 33,724.50 | 67,400.00 |
| உற்பத்தி செலவு | 1,536,851.10 | 3,361,325.53 |
| | 1,570,575.60 | 3,428,725.53 |
| இருப்பு சேதம் | (42,900.00) | - |
| இறுதி இருப்பு | (27,329.80) | (33,724.50) |
| | 1,500,345.80 | 3,395,001.03 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **(87,695.48)** | **(2,729,775.00)** |
| பொதுச் செலவுகள் | **2,138,698.64** | 2,540,635.19 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **(2,226,394.12)** | **(5,270,410.19)** |

2.5 **சுவபோஷ உற்பத்தி தொழிற்சாலை - கன்னோறுவை**
**2016.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016** ரூ. | **2015** ரூ. |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 140,000.00 | 999,592.55 |
| கொள்வனவு | 337,756.00 | 132,516.72 |
| இருப்பு சேதம் | (130,000.00) | |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | - | (140,000.00) |
| மூலப்பொருளுக்கான செலவு | 347,756.00 | 992,109.27 |
| நேர் சம்பளம் | - | - |
| ஆரம்ப இருப்பு - குறைவேலை | - | - |
| இறுதி இருப்பு - குறைவேலை | - | - |
| உற்பத்திக் கிரயம் | 347,756.00 | 992,109.27 |
| விற்பனை வருமானம் | **261,036.60** | **255,544.00** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 10,000.00 | |

| | | |
|---|---|---|
| | | 155,950.00 |
| உற்பத்திக் கிரயம் | 347,756.00 | 992,109.27 |
| | 357,756.00 | 1,148,059.27 |
| இறுதி இருப்பு | (233.25) | (10,000.00) |
| | 357,522.75 | 1,138,059.27 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **(96,486.15)** | **(882,515.27)** |
| பொதுச் செலவுகள் | 642,622.40 | 219,654.70 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **(739,108.55)** | **(1,102,169.97)** |

## 2.6 ஹெல்தி புட் உணவகம்

**2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016** ரூ. | **2015** ரூ. |
|---|---|---|
| விற்பனை வருமானம் | **11,015,509.64** | **14,936,207.64** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 237,898.50 | 212,587.15 |
| கொள்வனவு | 9,298,610.39 | 12,068,008.05 |
| சம்பளம் | 4,367,587.34 | 6,216,845.79 |
| இறுதி இருப்பு | (44,718.50) | (237,898.50) |
| | 13,859,377.73 | 18,259,542.49 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **(2,843,868.09)** | **(3,323,334.85)** |
| பொதுச் செலவுகள் | 968,647.85 | 869,198.24 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **(3,812,515.94)** | **(4,192,533.09)** |

2.7 **மவ்போஷ செயற்றிட்டம்**

**2016.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016** ரூ. | **2015** ரூ. |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 482,774.50 | 1,681,715.46 |
| கொள்வனவு | 396,250.00 | 1,350,865.10 |
| போக்குவரத்து | 26,300.00 | - |
| இருப்பு சேதம் | (265,000.00) | - |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | (6,555.00) | (482,774.50) |
| | 633,769.50 | 2,549,806.06 |
| உற்பத்திச் செலவு | 633,769.50 | 2,549,806.06 |
| விற்பனை வருமானம் | **773,995.35** | **347,307.50** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 295,460.00 | 671,040.00 |
| உற்பத்திச் செலவு | 633,769.50 | 2,549,806.06 |
| | 929,229.50 | 3,220,846.06 |
| இருப்பு சேதம் | (67,797.62) | |
| இறுதி இருப்பு | (596.46) | (295,460.00) |
| | 860,835.42 | 2,925,386.06 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **(86,840.07)** | **(2,578,078.56)** |
| பொதுச் செலவுகள் | 1,570,957.20 | 3,862,981.49 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **(1,657,797.27)** | **(6,441,060.05)** |

2.8 **புத்தல கொம்போஸ்ட் செயற்றிட்டம்**

**2016.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016 ரூ.** | **2015 ரூ.** |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | - | 136,460.00 |
| பயிரிடும் செலவு | 946,553.60 | 43,879.00 |
| நேர் சம்பளம் | - | 109,568.40 |
| போக்குவரத்து | - | - |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | (234,349.80) | - |
| | 712,203.80 | 289,907.40 |
| ஆரம்ப இருப்பு - குறைவேலை | - | - |
| இறுதி இருப்பு - குறைவேலை | - | - |
| உற்பத்திச் செலவு | 712,203.80 | 289,907.40 |
| விற்பனை வருமானம் | **916,206.25** | **272,885.00** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | - | 42,650.00 |
| உற்பத்திச் செலவு | 712,203.80 | 289,907.40 |
| இறுதி இருப்பு | - | - |
| | **712,203.80** | **332,557.40** |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **204,002.45** | **(59,672.40)** |
| | **147,408.90** | **79,201.33** |
| பொதுச் செலவுகள் | - | |
| **தேறிய இலாபம்** | **(138,873.73)** | **(138,873.73)** |

2.9 **பாரம்பரிய அரிசி செயற்றிட்டம்**

**2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016** ரூ. | **2015** ரூ. |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 313,509.90 | - |
| கொள்வனவு | 5,559,276.40 | 988,703.09 |
| போக்குவரத்து | 33,915.00 | - |
| அரைக்கும் செலவு | 124,380.00 | - |
| நேர் சம்பளம் | 659,448.00 | - |
| இருப்பு சேதம் | (732,375.00) | - |
| இறுதி இருப்பு | (122,520.00) | (313,509.00) |
| | 5,835633.40 | 675,194.09 |
| ஆரம்ப இருப்பு - குறைவேலை | **-** | **-** |
| இருப்பு சேதம் | (1,013,841.00) | - |
| இறுதி இருப்பு - குறைவேலை | **-** | **-** |
| உற்பத்திச் செலவு | 4,821,792.40 | 675,194.09 |
| விற்பனை வருமானம் | **4,467,445.00** | **105,710.00** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 156,950.00 | - |
| உற்பத்திச் செலவு | 4,821,792.40 | 675,194.09 |
| | 4,978,742.40 | 675,194.09 |
| இருப்பு சேதம் | (1,029,860.00) | |
| இறுதி இருப்பு | (67,940.00) | (156,950.00) |
| | **3,880,942.40** | **518,244.09** |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **586,502.60** | **(412,534.09)** |
| | **167,822.40** | **1,075,732.36** |
| பொதுச் செலவுகள் | | |
| **தேறிய இலாபம்** | **418,680.20** | **(1,488,266.45)** |

## 2.10 புத்தல பண்ணை

**2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | 2016 ரூ. | 2015ரூ. |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | - | - |
| பயிரிடல் செலவு | 3,575.00 | 46,338.80 |
| நேர் சம்பளம் | - | - |
| | - | |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | - | - |
| | 3,575.00 | 46,338.80 |
| ஆரம்ப இருப்பு - குறைவேலை | - | - |
| இறுதி இருப்பு - குறைவேலை | - | - |
| உற்பத்திச் செலவு | 3,575.00 | 46,338.80 |
| விற்பனை வருமானம் | **4,000.00** | **190,656.50** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | | |
| உற்பத்திச் செலவு | 3,575.00 | 46,338.80 |
| இறுதி இருப்பு | - | - |
| | 3,575.00 | 46,338.80 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **425.00** | **144,317.70** |
| பொதுச் செலவுகள் | 542,637.75 | 1,161,944.24 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **(542,212.75)** | **(1,017,626.54)** |

2.11 **தணமல்வில பண்ணை**

**2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016 ரூ.** | **2015ரூ.** |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | - | - |
| பயிரிடல் செலவு | - | 48,120.00 |
| | - | |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | - | - |
| | - | 48,120.00 |
| ஆரம்ப இருப்பு - குறைவேலை | - | - |
| இறுதி இருப்பு - குறைவேலை | - | - |
| உற்பத்திச் செலவு | | |
| | | 48,120.00 |
| விற்பனை வருமானம் | **128,000.00** | **302,260.00** |
| கழி: விற்பனைக் கிரயம் | **-** | **-** |
| ஆரம்ப இருப்பு | | |
| உற்பத்திச் செலவு | - | 48,120.00 |
| இறுதி இருப்பு | - | - |
| | - | 48,120.00 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **128,000.00** | **254,140.00** |
| பொதுச் செலவுகள் | 655,412.52 | 869,010.37 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **(527,412.52)** | **(614,870.37)** |

2.12 **சோயா செயற்றிட்டம்**

**2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016 ரூ.** |
|---|---|
| விற்பனை வருமானம் | **-** |
| கழி: விற்பனைக் கிரயம் | |
| ஆரம்ப இருப்பு | - |
| கொள்வனவு | 8,574,519.50 |
| பொதியிடும் செலவு | 72,756.68 |
| அரைக்கும் செலவு | 90,258.10 |
| களஞ்சிய செலவு | 55,140.00 |
| இறுதி இருப்பு | (8,631,729.50) |
| | 160,944.78 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **(160,944.78)** |

**2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016 ரூ.** |
|---|---|
| விற்பனை வருமானம் | **16,137,660.00** |
| கழி: விற்பனைக் கிரயம் | |
| ஆரம்ப இருப்பு | - |
| கொள்வனவு | 15,189,871.25 |
| பொதியிடும் செலவு | 132,812.50 |
| போக்குவரத்து | 115,000.00 |
| இருப்பு சேதம் | (56,551.00) |
| இறுதி இருப்பு | - |
| | 15,381,132.75 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **756,527.25** |
| பொதுச் செலவுகள் | 638,345.69 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **118,181.56** |

2.14 **பாசிப்பயறு செயற்றிட்டம்**

**2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016 ரூ.** |
|---|---|
| விற்பனை வருமானம் | **1,483,475.00** |
| கழி: விற்பனைக் கிரயம் | |
| ஆரம்ப இருப்பு | - |
| கொள்வனவு | 1,207,800.00 |
| பொதியிடும் செலவு | - |
| போக்குவரத்து | - |
| இருப்பு சேதம் | - |
| இறுதி இருப்பு | - |
| | 1,207,800.00 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **275,675.00** |

2.15 **ஹெல்தி புட் பசார் செயற்றிட்டம்**

**2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | **2016** ரூ. |
|---|---|
| விற்பனை வருமானம் | **3,274,892.13** |
| கழி: விற்பனைக் கிரயம் | |
| ஆரம்ப இருப்பு | - |
| கொள்வனவு | 3,124,768.50 |
| பொதியிடும் செலவு | - |
| இறுதி இருப்பு | - |
| | 3,124,768.50 |
| **மொத்த இலாபம்/நட்டம்** | **150,123.63** |
| பொதுச் செலவுகள் | 14,810.00 |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **135,313.63** |

**வியாபார, இலாப நட்டக் கணக்கு 2016** ரூ.

| | | |
|---|---|---|
| தெகிவளை விற்பனைக்கூடம் | 7,189,501.04 | 7,968,883.58 |
| நாரஹேன்பிட்டி நாற்று மேடை | 3,276,431.11 | 3,359,120.89 |
| தெகிவளை நாற்று மேடை | 2,233,701.98 | 766,459.58 |
| கலன்குட்டிய அரிசி மா செயற்றிட்டம் | (87,695.48) | (2,729,775.00) |
| சுவபோஷ செயற்றிட்டம் | (96,486.15) | (882,515.27) |
| ஹெல்தி புட்உணவகம் | (2,843,868.09) | (3,323,334.85) |
| மவ்போஷ செயற்றிட்டம் | (86,840.07) | (2,578,078.56) |
| புத்தல கொம்போஸ்ட் | 204,002.45 | (59,672.40) |
| பாரம்பரிய அரிசி செயற்றிட்டம் | 586,502.60 | (412,534.09) |
| புத்தல பண்ணை | 425.00 | 144,317.70 |
| தணமல்வில பண்ணை | 128,000.00 | 254,140.00 |
| சோயா செயற்றிட்டம் | (160,944.78) | - |
| சோளம் செயற்றிட்டம் | 756,527.25 | - |
| பாசிப்பயறு செயற்றிட்டம் | 275,675.00 | - |
| ஹெல்தி புட் பசார் | 150,123.63 | - |
| **மொத்தம்** | **11,525,055.49** | **2,507,011.58** |

03. நேர் அபிவிருத்தி செலவினம் மானியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

04. பிரதான அலுவலக நிருவாகம் பொருட்டு உறப்பட்ட சகல செலவினங்களும் திறைசேரி நிதியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

05. திறைசேரி நிதியங்கள்

| **விபரம்** | **வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு2016** | **2016உண்மையான செலவினம்** | **2016இல் திறைசேரியிடம் இருந்து பெற்ற நிதியேற்பாடு** | **சேமிப்பு/குறைவு** |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் | 54,154,100.00 | 44,063,624.61 | 38,000,000.00 | 16,154,100.00 |
| மூலதன | - | - | - | - |
| | | | **38,000,000.00** | |

06. செயற்றிட்டங்கள் பொருட்டு கமத்தொழில் அமைச்சிடமிருந்து பெற்ற நிதியம்

பின்வருமாறு மீண்டுவரும்,மூலதன செலவினங்களாக பயன்படுத்தப்பட்டன.

| விபரம் | மூலதன | மீண்டுவரும் | மொத்தம் |
|---|---|---|---|
| செயற்றிட்டம் | - | 23,112,012.18 | 23,112,012.18 |
| | | | 23,112,012.18 |

07. அம்பலாந்தோட்டை பண்ணையில் அமைக்கப்பட்ட வேலி பொருட்டு செலுத்தப்படவுள்ள ரூ.3,209,728.53 தொகை தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR 02401-13 எனும் வழக்கு இலக்கத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

# கணக்காய்வு அறிக்கை - 2016

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஏஜீஎல்/எச்சீபீ/01/16/01   ඔබේ අංකය / உமது இல. / Your No.   දිනය / திகதி / Date 2017 மே 31

தலைவர்,
இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை.

**இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களனிதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) உப பிரிவுகளின் பிரகாரம் தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாள் ஏற்படும் தாக்கத்தினை தவிர, நிதிக்கூற்றுக்களின் 2016 திசெம்பர் 31 இல் தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்ட்டன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்- 07

நியமத்தின் 86(இ) பந்தியின் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களின் பெறுமானத்தேய்வு கணிப்பீட்டுக்காக பயன்படுத்திய பெறுமானத்தேய்வு விகிதங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்- 09

நியமத்தின் 9 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 3,481,290 கிரயமான பழுதடைந்த இருப்புகள் நிதிகூற்றுக்களில் இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் ஆகியவற்றை வெளிப்படுத்தி செயற்பாடுகளை இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் நிலவியன.

(i) செயற்பாட்டு இலாபத்தினை கணிப்பிடுவதற்கான செம்மையாக்கலில் ஓய்வூதியப் பணிக்கொடைக்காக ஏற்பாடு ரூபா 371,989 வினால் குறைத்து காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கொடுப்பணவு செய்யப்பட்ட ரூபா 569,140 வான பணிக்கொடை கொடுப்பனவு காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் ரூபா 31,641 வான சேமிப்பு வட்டியை மீள முதலீடு செய்தல் முதலீட்டு செயற்பாடுகளினாலான காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்ட்டிருக்கவில்லை.

(iii) முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய கடன் பதிவழித்தல் ரூபா 80,610 காசுப்பாய்ச்சல் கூற்றில் இரு முறை குறிப்பிப்பட்டிருந்தது.

(ஆ) மீள்மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், தற்காலிக கட்டிடங்களின் பயனுள்ள ஆயட் காலம் 10 வருடம் என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பெறுமானத்தேய்வு கணிப்பிடும்

போது 19 வருடம் என கவனத்திற்கொண்டு பெறுமானத்தேய்வு இடப்பட்டதன் காரணமாக மீளாய்வான்டின் போது பெறுமானத்தேய்வு அளவு ரூபா 100,799 வினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிலுள்ள இறுதி இருப்பு ரூபா 1,938,769 வினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னால் அலுவலர் ஒருவரினால் 2011 ஆண்டின் போது கடன் அடிப்படையில் ரூபா 64,500 பெருமதியான சுவபோஷ மற்றும் மவ்போஷ பொதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் மீளாய்வாண்டின இறுதி வரையிலும் அவ்நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் செலுத்த வேண்டிய செலவினமாகக் கணக்குகளில் ரூபா 3,300,000 தொகை காட்டப்பட்டிருந்ததுடன் நெல் சந்தைப்படுத்தல் சபையின் கணக்குகளின் பிரகாரம், அந்த பெறவேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில்லை.

(இ) 2011,2012 மற்றும் 2013 ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோர் மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 878,842 ஆனதுடன் அத்தொகயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2 வருடங்களிருந்து 5 வருடங்கள் வரையான மற்றும் 5 வருடங்களுக்கு மேலாக முன் கொண்டுவரப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதிகள் முறையே ரூபா 390,560 மற்றும் ரூபா 199,757 ஆகும். அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையால் விவசாய்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 5,500,000 கடனை 2016 ஆண்டின் போது செலுத்தி முடிக்கவேணடிய போதிலும் மீளாய்வான்டு இறுதிவரை ரூபா 4,900,000
தொகை செலுத்த வேண்டி இருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | |
| (அ) நிதிப் பிரமாணம் 177(1) மற்றும் 371 | சேர்க்கப்படும் பணம் தினத்தோறும் வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும் தெஹிவளை விற்பனை நிலையம் மற்றும் நாரஹேன்பிடியலிலுள்ள பயிர் நாற்றங்காலில் சேர்க்கப்பட்ட பணம் 6 நாட்கள் முதல் 12 நாட்கள் வரை தாமதித்து வங்கியிலிடப்படும் சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் தெஹிவளை விற்பனை நிலையத்திற்கு அனுமதிக்கப்பட்ட சில்லறைக்காசு கட்டு நிதி ரூபா 70,000 தொகையானதுடன் அத்தொகையை விஞ்சி ரூபா 131,092 முதல் ரூபா 271,946 வரையான தொகை கையிருப்பில் காணப்பட்டது. |
| (ஆ) நிதிப் பிரமாணம் இலக்கம் 751(1) | தெஹிவளை விற்பனை நிலையத்தால் பொருட் பதிவேடு மற்றும் இருப்பு புத்தகங்கள் என்பன பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் நிதி விளைவுகளில் ரூபா 2,343,342 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 13,925,060 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி

விளைவுகளில் ரூபா 11,581,718 தொகையான முன்னேற்றமொன்றைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போக்குவரத்து, தொலைதொடர்பு, பயன்பாட்டு மற்றும் ஏனைய சேவைகள் செலவினம் ரூபா 17,608,143 இனால் அதிகரித்த போதும் திறைசேரியிலிருந்தும் கமத்தொழில் அமைச்சிலிருந்தும் கிடைத்த ஒதுக்கம் ரூபா 22,391,535 இனால் அதிகரித்ததும் ஏனைய வருமானம் ரூபா 9,018,043 இனால் அதிகரித்ததும் மேற்குறிப்பிடப்பட்ட நிதிசார்விளைவின் முன்னேற்றத்தை பிரதானமாகப் பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது நிதிசார் விளைவில் 2014 ஆம் ஆண்டில் மிகையொன்றும் 2012, 2013, 2015, மற்றும் 2016 ஆண்டுகளில் பற்றாக்குறையொன்று நிலவியது. ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வைக் கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 17,768,473 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 37,019,044 க்கு அதிகரித்திருந்தது.

## 3.2 சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட வழக்குகள்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றியும் சபைக்கு சட்டரீதியான உரித்தற்ற காணியொன்றுக்கு 2012 ஆம் ஆண்டின் போது வேலியொன்று நிர்மாணிப்பதற்காக உடன்பட்ட பெருமதிக்கு பாற்றமாகவும் கொள்வனவு நடைமுறைக்கி மாற்றமாகவும் ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தப்படாமையினால் ரூபா 3,209,728 தொகையான இழப்பீடு கோரி அவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீளாய்வாண்டின் இறுதிவரை முடிவடையாது காணப்பட்டது.

## 3.3 ஏனைய அரச நிறுவனங்களின் வளங்களை பயன்படுத்தல்

கமத்தொழில் அமைச்சிற்கு சொந்தமான 03 மோட்டார் வாகனங்களும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சிக்கு உரிய 03 டக்கர் வண்டிகளும் மஹவலி அதிகார சபைக்கு உரிய ஒரு மோட்டார் வாகனமும், சிறு ஏற்றுமதி பயிர் மேம்பாட்டு சபைக்கு உரிய ஒரு மோட்டார் வாகனமும் சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்காமல் சபையால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1973 இன் 15 ஆம் இலக்க பட்டினி ஒழிப்பு இயக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திற்காக அரசசார்பற்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவராண்மையிலிருந்து உதவி பெறல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது நிறுவனங்களுக்கும் ஏனைய சபைகளுக்கும் உதவுதல், கமநல மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கு தொடர்புபடுத்தப்பட்ட உத்தேச திட்டங்களுக்கு உதவி வழங்குதல், முன்னேற்றுதல் மற்றும் ஒழுங்கிணைத்தல், மற்றும்

அமுல்ப்படுத்துதல் மூலம் அரச சார்பற்ற முகவராண்மைகளை ஊக்குவித்தல், சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய சமனான வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் என்பன சபையின் நோக்கங்களாகும்.

(அ) மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், ரூபா 617.91 மில்லியன் தொகையை செலவினவுகள் மூலம் 12 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மதிப்பீடு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டில் அச் செயற்திட்டம் எதுவும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் 12 செயற்திட்டங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 274 மில்லியன் வருமானத்தை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போது உழைத்த வருமானம் ரூபா மில்லியன் 75 மாத்திரமேயாகும். அமுழ்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டன.

(i) தனமல்வில பண்ணை

-----------------------------------

16 ஏக்கரை கொண்டுள்ள இப்பண்ணையினுள் எவ்வித பயிரிடலும் செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் குத்தகை வாடகை வருமானமாக ரூபா 128,000 உழைக்கப்பட்டிருந்ததுடன் மொத்த செலவு ரூபா 655,412 ஆகும்.

(ii) புத்தள இயற்கைப் பசளை செயற்திட்டம்

--------------------------------------------------------------------

10 ஏக்கர்களை கொண்டுள்ள இக்காணியில் இயற்கை பசளை செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்படுவதன் மீளாய்வாண்டில் உற்பத்தி அளவு 87,650 கிலோகிராம் ஆகும். எவ்வாறாயினும் இவ்வுற்பத்திகளுக்காக எஸ்எல்எஸ் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) தெஹிவளை நுகர்வுப் பொருட்கள் விற்பனை நிலையம்

-------------------------------------------------------------------------------------------

தெஹிவளை விற்பனை நிலையத்தின் இலாபம் முன்னைய ஆண்டைவிட 83 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. விற்பனை வருமானம் ரூபா 2,005,531 இனால் குறைவடைந்தமை மற்றும் ஆண்டின் போது மேற்தணச் செலவினம் ரூபா 424,755 இனால் அதிகரித்தமை இதறகுக் காரணமாகிருந்தது.

(iv) சுகாதார உணவு சிற்றுண்டிச்சாலை

- நச்சற்ற பாரம்பரிய சுவதேச உணவுகள் நுகர்வோர் முறையை ஏற்படுத்தும் நோக்கில் நாராஹேன்பிற்ற பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட சுகாதார உணவு சிற்றுண்டிச்சாலையில் அவ்வாறான உணவுகள் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. அங்கு வருமானம் மற்றும் செலவின நிலைமைகளை கவனிக்கும் போது 2012 ஆண்டில் ரூபா 406,765 வான நட்டம் படிப்படியாக அதிகரித்து 2015 ஆண்டில் ரூபா 4,192,533 வானதுடன் 2016 ஆண்டில் இது ரூபா 3,812,515 வாக காணப்பட்டன.

- இவ் உணவகத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்கள் மற்றும் தயார் செய்யப்பட்டிருந்த உணவுகளிற்கிடையே கணிசமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே உள்ளன.

| பொருட்கள் | அளவு கிலோ கிராம் | தயார் செய்ய முடியுமான உணவுகள் (பொதிகள்) | தயார் செய்யப்பட்ட உணவுகள் (பொதிகள்) | விலகல்கள் (பொதிகள்) |
|---|---|---|---|---|
| அரிசி | 1,762 | 10,551 | 7,233 | 3,318 |
| மீன் | 210 | 5,215 | 1,945 | 3,461 |
| இறைச்சி | 188 | 2,774 | 1,046 | 1,728 |

(v) நாராஹேன்பிற்றிய நாற்றுமேடை

இந்த நாற்றுமேடை வருமானத்தின் அதிக விகிதம் வேறபட்ட பயிர்வகை விற்பனை மூலம் பெறப்பட்டதுடன் 2016 ஆகஸ்ட் 08 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது 06 பயிர் வகைகளின் பௌதீக மீதிகள் மற்றும் இருப்புப் பதிவேட்டு மீதிகளுக்கிடையில் ரூபா 14,425 பெறுமதியான 102 பயிர்களின் பற்றாக்குறை காணப்பட்டது.

(vi) அரிசி மா மேம்பாட்டு செயற்திட்டம் - களங்குற்றிய

மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டம் ரூபா 226,394 நட்டத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் மொத்த கிரயத்தின் 83 சதவீதம் சம்பளங்கள் மற்றும் படிகலிற்காக செலவிடப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அதிகாரச் சட்டத்திற்கான திருத்தங்களை முன்வைக்குமாறு 2012 ஒக்தோபர் 01 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற் குழுவினால் தீர்மானமொன்றை வழங்கியிருந்ததுடன் அத்தீர்மானம் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை..

(ஆ) 2012 ஆம் ஆண்டு நாராஹென்பிற்றிய விற்பனை நிலையத்தில் ரூபா 77,352 பணக் களவு தொடர்பாக குற்றப்பத்திரிகை நகல் மற்றும் ஆரம்ப விசாரணை அறிக்கை 2015 மே 05 இல் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2017 மே 25 ஆந் திகதி வரையாலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(இ) மீளாய்வாண்டின் போது சுகாதார உணவு சிற்றுண்டிச்சாலையில் ஏற்பட்ட ரூபா 73,415 ஊழல் தொடர்பாக 2016 ஜூலை 28 இல் கமத்தொழில் அமைச்சின் விசாரணைக் குழுவொன்றினால் நடத்தப்பட்ட ஆரம்ப விசாரணையின் பிரகாரம், அத் தொகை உரிய ஊழியரிடமிருந்து அறவிட பரிந்துறைக்கப்பட்ட போதும் 2017 மே 25 வரையிலும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கொழும்பில் இடம்பெற்ற நச்சுவிசமற்ற தேசிய சந்தை கண்காட்சிக்காக பெயர்பலகை, தகவல் பலகை, இலட்சினை மற்றும் கண்காட்சி செலவாக ரூபா 486,110 சபையினால் செலவு செய்யப்பட்டிருந்தது. அக் கண்காட்சிக்காக பாவிக்கப்பட்ட பெயர் பலகை, தகவல் பலகை மற்றும் கண்காட்சிப் பலகை என்பன அம்பாறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட இரண்டாம் கண்காட்சிக்காக பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இருந்த போதிலும் அதற்காக மீண்டும் ரூபா 550,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மைலான கொடுக்கல் வாங்கல்கள்**

சபையின் நோக்கங்களிற்கு புறம்பாக பசளை மானிய பணம் வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக "கமத்திற்கு சரியான பாதை" எனும் மகுடத்தின் கீழ் 07 பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பிற்கு ரூபா 1,878,318 வும் "கிராம வாயில்" நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஊடக பிரச்சார நடவடிக்கைகளுக்காக 8 பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிப்பதற்காக ரூபா 2,543,200 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

**4.5 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹிவளை விற்பனை நிலையத்தில் வெதுப்பகமொன்றை நடாத்திச் செல்வதற்கு 2012 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 452,000 பெறுமதியான 2 இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் பண்டகசாலையில் விறைவற்றதாகக் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 03 சேமிப்பு கணக்குகளில் நிலவிய ரூபா 806,008 தொகையை ஆக்கபூர்வ முதலீட்டு வழிகளில் முதலீடு செய்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 28 ஆக காணப்பட்ட போதும், 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 43 ஊழியர்களை ஆட்சேர்க்கப்படாமை காரணமாக உள்ளவாறான ஆளனி 71 ஆகவிருந்தது. எனினும் மேலதிக ஊழியர் எண்ணிக்கைக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 7 வது பந்தியின் பிரகாரம் 2014 நவம்பர் 12 திகதிக்கு பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைணக்களத்தின் முன்கூட்டிய அங்கீகாரத்தின் பின்னரே தற்காலிக, அமைய, பதிற்கடமை அல்லது ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரனாக ஒப்பந்த மற்றும் நாட்சம்பளம் வழங்கும் அடிப்படையில் 4 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) பிரதி பணிப்பாளர் பதவி பதவியுயர்வு செய்யப்படும் தரமொன்றாக நியமிக்கப்பட வேண்டுமென முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது பிரதி பணிப்பாளர் (அபிவிருத்தி) ) வெளிவாரியாக ஆட்சேர்ப்பதற்காக ரூபா 43,412 தொகை செலவில் பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரித்து நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் மற்றும் செலவினத்தையும், உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 15 சதவீதம் தொடக்கம் 98 சதவீதம் வரையிலான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.2 கொள்வனவு திட்டம்**

கொள்வனவு திட்டத்தில் உள்ளடங்கிய 5 விடயங்களுக்காக ரூபா 26,117,000 வான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்படாதிருந்ததுடன் 3 விடயங்களுக்காக ரூபா 3,310,000 வான ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 878,860 வான கொள்ளவனவு மட்டுமே செய்யப்படடிருந்தன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்குமிடையே விலகல்கள் அவதானிக்கப்பட்டமையும் கடன்களைத் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையும் |
| (ஆ) | சொத்துக்கள் நிர்வாகம் | வாகனங்கள் முறையாக சுவீகரிக்கப்படாமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பதவியணியினர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை |
| (ஈ) | செயற்திட்ட முகாமைத்துவம் | செயல்நடவடிக்கைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமை மற்றும் தொடர்ந்து செயற்திட்டதிலிருந்து நட்டம் அடைந்தமை |

ஒப்பம் : எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி